# நான் எனும்
# கர்வம் நீங்க

மெல்ல ஒரு அம்பெடுத்து என்னைக் கொல்லுவாய் ராமா
மோகமெனும் ராட்சஸனை மூளி செய்குவாய் ராமா

கொல்லுதற்கு முன்பு வந்து சொன்னவருண்டோ - உந்தன்
கூர்ச்சரத்தைத் தாங்குதற்குக் கேட்ட வருண்டோ –ராமா

(மெல்ல)

வாசமிகு இளமையிலே கேட்டதில்லையே நான்
வாய் திறந்து உன் சரிதம் சொன்னதில்லையோ – ராமா
(மெல்ல)

கண்வெளிறி தலை நரைத்த காலம் வந்ததே - நான்
கண்டவையும் கொண்டவையும் கந்தலாச்சுதே - ராமா
(மெல்ல)

காதலுடன் காத்திருந்த சபரியில்லையே நான்
கனிவுடனே பார்த்திருந்த அனுமனில்லையே ராமா

(மெல்ல)

தீய இடம் மாறிவரும் தெளிவுமில்லையே என்னுள்
உனையறியும் விபீடணச் சரணமில்லையே ராமா

(மெல்ல)

வெளியுருவம் மானிடராய் ஊரறிந்தாலும்-என்னுள்
வெறி பிடித்த ராட்சஸங்கள் இன்னும் உள்ளரே - ராமா

(மெல்ல)

நோகுமென கருணையுடன் பார்ப்பதென்னவோ இந்த
நொய்மை மிகு வாழ்க்கையிலே சாரமுள்ளதோ ராமா

(மெல்ல)

நாளை தினம் ராவணனை வாவெனச் சொன்னாய் இங்கே
நான் வரவும் நீ அதனைச் சொல்லலாகுமோ ராமா

(மெல்ல)

வில்லெடுத்து விரல் அழுத்தி நாணிழுப்பாயே ராமா
என் மரணம் வரமெனவே நீ தருவாயோ ராமா

(மெல்ல)

நான் இருக்க உனையறியும் அறம் வளராதே ராமா
அறம் வளர அறம் வளர எனை அழிப்பாயே ராமா

(மெல்ல)